**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**அசல் வழக்கு எண்.813/2024** **நாள்- 21.11.2025**

**வா.சா.1. பாலசுப்பிரமணியன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

நான் சாலை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். மனைவி ராமுத்தாய் காட்டு வேலை செய்து வருகிறார். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் உறவுமுறையா அல்லது பழக்கமா என்று என்னுடைய வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் கடன் என் ற வார்த்தை இல்லை என்றால் 1ம் பிரதிவாதி தயார் செய்து கொண்டு வந்தார். 1ம் பிரதிவாதி தான் வா.சா.ஆ.1-ஐ தயார் செய்து வந்தார் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- உறுதிமொழி பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உறுதிமொழி பத்திரத்தில் என்னுடைய பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான் என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் சாட்சியம் அளிக்கிறேன். பிரதிவாதிகளுக்கு எங்கு வைத்து ரூ.1,80,000/- கடன் கொடுத்தேன் என்று வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 10.07.2020ம் தேதி என் மனைவிக்கு ரூ.1,80,000/- பணம் எவ்வாறு கிடைத்தது என்று வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். 10.07.2020 அன்று கொரானா பரவல் காலம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பிரதிவாதிக்கு நான் கடன் கொடுக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 06.07.2022 அன்று 2ம் பிரதிவாதி என் மனைவிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1- எங்கு வைத்து எழுதப்பட்டது என்று என் வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் பிரதிவாதி தான் எழுதிக் கொண்டு வந்தார். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு கிடையாது என்றும் ஒப்பந்த பத்திரம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- ல் வட்டி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ஐ பிரதிவாதிகள் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.1- ஐ எந்த தேதியில் வாங்கி கொண்டு வந்தார் என்று வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல 10.07.2020 அன்று வாங்கி வந்தார். வா.சா.ஆ.1- முத்திரைத்தாள் 03.02.2020 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் 3வது பாராவில் தேதி மற்றும் தொகை கையால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் என் வீட்டில் வைத்து கையால் எழுதிக் கொடுத்தார். மேற்கண்ட விவரத்தை என் வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் சாட்சிகள் நான் சொல்லும் தேதியில் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1. சாட்சிகள் நான் சொல்லும் தேதியில் கையொப்பம் செய்யவில்லை என்று வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்புலட்சுமி என்பவரை தெரியும். சுப்புலட்சுமியும் என்

மனைவியும் நெருங்கிய நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கும், சுப்புலட்சுமிக்கும் முன் விரோதம் உண்டா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1- ல் 1 வது சாட்சியாக சொக்கரும், 2 வது சாட்சியாக ஆறுமுகம் என்பவர் கையொப்பம் செய்துள்ளார்கள். சாட்சிகள் இருவரும், நாங்களும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் தான் ஆனால் உறவினர்கள் இல்லை. அவர்கள் வேறு தெருவில் குடியிருந்து வருகிறார்கள். 2ம் பிரதிவாதி, என் மனைவியிடம் நான் சொல்லும் தேதிக்கு முன்பாக பணம் வாங்கவில்லை. 2ம் பிரதிவாதி 18.10.2018 ம் தேதி ரூ.1,80,000/- , ரூ.3 - *வட்டி வீதம் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ரூ.5400-* வட்டியாகவும், அசல் ரூ.10000/-மும் 20.06.2022 வரை 44 மாதங்கள் திருப்பி செலுத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடனுறுதி சீட்டை 2ம் பிரதிவாதி வசம் திருப்பி கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அசல் மற்றும் வட்டி தொகையாக மொத்தம் ரூ.6,77,600/- வரை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நானும், என் மனைவியும் பணம் கொடுத்து வட்டி தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 18.07.2022 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பில் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வட்டி வாங்குவதாக இருந்தால் பிரதிவாதியின் வீட்டில் சென்று தான் வாங்குவேன் என்றால் வட்டி கொடுக்கவே இல்லை. இந்த வழக்கிற்கு பிறகு 2ம் பிரதிவாதியை கவுன்சிலர் மூலம் மிரட்டி பணம் கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் வட்டி என்ற வாசகங்கள் இல்லாததால் நான் வட்டி கேட்க முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் வட்டி பற்றி கூறப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் கையொப்பமும், வா.சா.ஆ.1-ல் உள்ள கையொப்பமும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- பிரதிவாதிகள் கையொப்பம் செய்யவில்லை என்றும் பிரதிவாதிகள் வா.சா.ஆ.1- ஐ எழுதிக் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1- உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ஏற்கனவே கடன் பெற்று திருப்பி செலுத்திய வகையில் பிரச்சனை ஏற்பட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் என்னிடம் கடன் வாங்கினாரா என்று கேட்டால் 2 பேரும் சேர்ந்து தான் வாங்கினார்கள். சாட்சிகளை பிரதிவாதிகள் தான் அழைத்து வந்தார்கள். பிரதிவாதிகள் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வா.சா.ஆ.1- பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.